Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935



# “ஜாபர் சாதிக்குடன் தொடர்புடையவர்கள் பா.ஜ.க, அ.தி.மு.க.வில்தான் இருக்கிறார்கள். புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி

சென்னை, 10 மார்ச் 2024: “தி.மு.க.வையோ, தி.மு.க. தலைவர்களையோ இணைத்து எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தினால் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் தொடர்வோம்” - தலைமைக்கழகச் சட்டத் தலைமை ஆலோசகர் - பி.வில்சன் எம்.பி. அண்ணா அறிவாலயத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் - சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, தலைமைக்கழகச் சட்ட தலைமை ஆலோசகர் - பி.வில்சன் எம்.பி. ஆகியோர் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி அவர்கள் செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்த விவரம் பின்வருமாறுஞ்

தி.மு.க.வைக் களங்கப்படுத்தும் நோக்கோடு பாரதீய ஜனதா கட்சி செய்யும் அரசியல் தமிழ்நாட்டிலும் ஈடேறாது. அகில இந்திய அளவிலும் ஈடேறாது. பா.ஜ.க. அரசின் சர்வாதிகார பிடியிலிருந்து இந்தியாவை மீட்க வேண்டும், நாட்டை விடுவிக்க வேண்டும் என்பதற்காக அகில இந்திய அளவில் அணி திரட்டுவதில் முக்கியப் பங்கு வகித்துக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தேர்தல் களத்தில் களங்கப்படுத்தி, அரசியல் ஆதாயம் பெற்றுவிடலாம் என்று பா.ஜ.க. தப்பு கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குத் துணையாக அ.தி.மு.க.வும் துதி பாடிக்கொண்டிருக்கின்றது.

முன்பெல்லாம் வருமான வரித்துறை, சி.பி.ஐ, அமலாக்கத்துறை போன்ற ஒன்றிய அரசின் விசாரணை அமைப்புகளை வரிசையாகக் களமிறக்கி விட்ட பாரதீய ஜனதா அரசு, தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசைக் களங்கப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு என் சி பி-ஐக் களத்தில் இறக்கிவிட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் போதைப்பொருள் தடுப்பில் மேற்கொண்ட நடவடிக்கைகளை நீதிமன்றமும் பாராட்டி இருக்கிறது, எல்லோரும் பாராட்டி இருக்கிறார்கள். ஆனால் திமுகவை என் சி பி-ஐ வைத்து மிரட்டிப் பார்க்கலாம் என்று எண்ணிப் பார்க்கிறார்கள். என் சி பி விசாரணை அமைப்பினுடைய துணை இயக்குநர் ஞானேஸ்வர் சிங் டெல்லியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்திருக்கிறார். ஒரு விசாரணை அமைப்பின் துணை இயக்குநர் புலன்



விசாரணை முழுமையாக நடைபெறாமலேயே பத்திரிகையாளர்களைச் சந்தித்திருக்கின்றார். விசாரணை முழுமையாக முடிந்த பிறகு சந்திக்க வேண்டும், ஆனால் அதற்கு முன்னதாகவே தி.மு.க.வைக் கொச்சைப்படுத்தி விட வேண்டும் என்பதற்காகப் பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்தியுள்ளார். அதன் மூலமாக ஏதாவது அரசியல் ஆதாயம் அடைய முடியுமா? என்று தப்புக்கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அ.தி.மு.க ஆட்சியில் குட்கா வியாபாரிகளுக்கு அமைச்சர்களே துணையாக இருந்தது என்பது நாடறிந்த உண்மை. நீதிமன்றத்தில் நாங்கள் போராடி அந்த அமைச்சர் மீதும், தொடர்புடைய அதிகாரிகள் மீதும் சி.பி.ஐ விசாரணை நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கிறோம். இதற்கெல்லாம் ஆட்சியாளர்களே துணையாக இருந்தார்கள். முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் ஒரு பேப்பர் எடுக்கப்பட்டது, அதில் 85 கோடி ரூபாய் எந்தெந்த அமைச்சர்களுக்குத் தரப்பட்டன என்ற விவரங்கள் இருக்கிறது. அதில் வருமானவரித் துறையோ, அமலாக்கத் துறையோ எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. எந்த வகையிலாவது பா.ஜ.க.வை தாங்கிப் பிடிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசின் புலன் விசாரணை அமைப்புகள் துடித்துக் கொண்டிருக்கின்றன.

ஜாபர் சாதிக் மீது பிப்ரவரி 15-ஆம் தேதி லுக் அவுட் நோட்டீஸ் அனுப்பி, தேடப்படும் குற்றவாளி என அறிவித்திருக்கிறார்கள். பிப்ரவரி 21-ஆம் தேதி மங்கை என்ற திரைப்பட விழாவில் அவர் கலந்து கொண்டு இருக்கின்றார். அப்போது உங்களுடைய என் சி பி எங்கே போனது?

2013-ஆம் ஆண்டிலேயே ஜாபர் சாதிக் மீது ஒரு வழக்கு வந்தது, அன்றைக்கு அதிமுகதான் ஆட்சியில் இருந்தது. ஒழுங்காக அந்த வழக்கையும் நடத்தவில்லை. அன்றைக்கு ஜாபர் சாதிக்கிற்காக வழக்கினை நடத்தியவர் பாரதிய ஜனதா கட்சியினுடைய வழக்கறிஞர் பிரிவு தலைவர் பால் கனகராஜ். ஜாபர் சாதிக்கைக் காப்பாற்றியது அ.தி.மு.க ஆட்சியிலேதான் நடந்தது.

திமுகவில் இரண்டு கோடி பேருக்கு மேல் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். வருகின்றவர்களை எல்லாம் சோதித்துப் பார்த்துக் கட்சியில் சேர்க்க முடியாது, அதே நேரத்தில் அவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்று தெரிந்தால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஜாபர் சாதிக் போன்றவர்கள் கட்சியை விட்டே நீக்கப்பட்டிருக்கிறார்கள்.

போதைப்பொருள் நடமாட்டத்திற்கு முக்கியக் காரணமாக அமைந்திருப்பது குஜராத்தின் முந்த்ரா துறைமுகம்தான். அந்தத் துறைமுகத்திலிருந்து 21,000 கிலோவும் கடத்தப்பட்டுள்ளது, 9,000 கிலோவும் கடத்தப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானிலிருந்தும் கடத்தப்பட்டிருக்கிறது. உத்தரப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிராவில்தான் அதிகமான வழக்குகள் போடப்பட்டிருக்கிறது.

தேர்தல் வருகின்றபோது ஏதாவது பொய்யான குற்றச்சாட்டைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது சுமத்தி விட முடியாதா? என்று பகல்கனவு கண்டு கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. அவர்களுக்கு ஒன்றை ஒன்று மட்டும் சொல்லிக் கொள்கிறோம், தமிழ்நாட்டு மக்கள் ஏமாளிகள் அல்ல. தி.மு.க என்றுமே சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாது. அதற்குத் துணை போகிறவர்கள் யாரையும் வைத்துக்கொள்ள மாட்டோம் என உறுதிபட கூறுகிறோம். எங்கள் மீது பழி போடுகிறவர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறோம், என் சி பி-தான் முழுப் பொறுப்பு, என் சி பி தமிழ்நாட்டில் ஏதாவது பிடித்தார்களா? ஜாபர் சாதிக் பற்றி சொல்கிறபோது டெல்லியிலும், வேறு மாநிலத்திலும்தான் போதைப்பொருள் பிடிக்கப்பட்டு இருக்கிறது, தமிழ்நாட்டில் கிடையாது. தமிழ்நாட்டைப் பொருத்த அளவில் போதைப் பொருள் நடமாட்டத்தை முழுமையாகத் தடுத்து வைத்திருக்கிறோம். கஞ்சா பயிர் ஒரு சென்ட் கூட நடப்படாத மாநிலமாக தமிழ்நாடு உள்ளது என்பது உலகத்திற்கு தெரியும். அப்படிப்பட்ட இடத்தில் இருக்கும் நாங்கள் நிச்சயமாக போதைப் பொருள் நடமாட்டத்திற்கு உறுதுணையாக எந்த வகையிலும் இருக்க மாட்டோம்.

தமிழ்நாட்டை அவமதிக்கும் செயலாக, தமிழ்நாடு போதைப் பொருள் தலைநகரமாக மாறியிருக்கிறது எனக் கூறி தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும் அவமதிக்கும் பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் போன்ற வளர்ச்சியை எங்களுக்கு ஏன் ஏற்படுத்தவில்லை? என ஒன்றிய பா.ஜ.க.வை நோக்கி வட இந்திய மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். போதைப் பொருள் மாநிலம் போல தமிழ்நாட்டை சித்தரித்தால்தான், தமிழ்நாட்டின் வளர்ச்சி வட இந்தியாவில் பேசுபொருளாகாது என்பதற்காகவே பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். பா.ஜ.க.வில் இருக்கக்கூடிய பலர் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவர்களெல்லாம் பாஜகவில் சேர்ந்தவுடன் புனிதர்களாக மாறிவிட்டார்கள்.

முன்னாலேயே நடந்த சம்பவத்தைத் தி.மு.க மீது பழிபோடலாம் என தப்புக் கணக்குப் போட்டார்கள். ஜாபர் சாதிக் கட்சியை விட்டு நீக்கப்பட்டு விட்டார், அவரோடு தொடர்புடையவர்கள் பா.ஜ.க, அ.தி.மு.க.வில்தான் இருக்கிறார்கள். ஜாபர் சாதிக்கை எங்கே பிடித்தார்கள் என என் சி பி தெளிவாகக் கூறவில்லை. விசாரணை நடைபெறாமலேயே செய்தியாளர் சந்திப்பு நடத்தியது தவறு, கண்டிக்கத்தக்கது. குற்றவாளிக்குத் துணைபோக மாட்டோம், சட்டப்பூர்வமாக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத்தருவோம். ஒன்றிய அரசு தகுந்த சாட்சியங்களோடு வழக்கு தொடர்ந்தால் மகிழ்ச்சி. அவர் ஒரு பைசா கூட கட்சிக்கு தரவில்லை.

தலைமைக்கழக சட்ட தலைமை ஆலோசகர் - பி.வில்சன் எம்.பி. செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்த விவரம் பின்வருமாறுஞ்

தேவையில்லாமல் இந்த விசாரணையில் திமுக மற்றும் தி.மு.க தலைவர்களைச் சிலர் கூறி வருகிறார்கள். விசாரணை ஆரம்ப நிலையில் இருக்கும்போதே என் சி பி துணை இயக்குநர் செய்தியாளர் சந்திப்பு நடத்தியது, அதுவும் தேர்தல் நேரத்தில் சொல்வது சந்தேகத்தைத் தருகிறது. இதுபோன்ற பேட்டிகள் அவதூறு செய்யும் எண்ணத்தில் செயல்படுவதாகவே தெரிகிறது. கட்சியையோ, கட்சித் தலைவர்களையோ இணைத்து எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் இது போன்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தினால் அவர்கள் மீது நிச்சயமாக சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் தொடர்வோம்.

தேவையில்லாமல் அடிப்படை ஆதாரம் இல்லாமல் கட்சியை விட்டு வெளியே அனுப்பியவர் குறித்துப் பேசுகிறார்கள். தகவல் வந்தவுடன் கட்சியில் இருந்து நீக்கி விட்டார்கள். குட்கா வழக்கில் விஜயபாஸ்கர் மீது குற்றம்சாட்டப்பட்டது, அவர் மீது குற்றப்பத்திரிக்கை கொடுத்துள்ளார்கள். அவரைப் பதவியிலிருந்து எடுத்தார்களா? ஆளுநரும் அந்த வழக்கிற்கு அனுமதியே கொடுக்கவில்லை, உச்சநீதிமன்றத்திற்குச் சென்ற பிறகே விஜயபாஸ்கர் மீது மட்டுமல்லாமல் ரமணா மீதும் அனுமதி வழங்கப்பட்டது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கழகத் தலைவர் அவர்களால் அந்த வழக்கு சிபிஐ-க்கு மாற்றப்பட்டது. போதைப் பொருளை ஒழிப்பதற்குத் தி.மு.க.வைப் போன்று எந்த கட்சியும் நடவடிக்கை எடுத்தது கிடையாது.





PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
ஞாயிற்றுக்கிழமை,
மார்ச் 10, 2024

## சென்னை விஐடி பல்கலைக்கழகத்தில் 12,000 + மாணவர்கள் முன்னிலையில் நடிகர் விஷால் மற்றும் இயக்குநர் ஹரி இணைந்துள்ள 'ரத்னம்' திரைப்படத்தின் முதல் பாடல் 'டோன்ட் ஒரி டோன்ட் ஒரிடா மச்சி' வெளியீடு




சென்னை, 10 மார்ச் 2024: 'தாமிரபரணி' மற்றும் 'பூஜை' சூப்பர் ஹிட் படங்களுக்கு பிறகு நடிகர் விஷால் மற்றும் இயக்குநர் ஹரி ஆகியோர் ஸ்டோன்பெஞ்ச் ஃபிலிம்ஸ் கார்த்திகேயன் சந்தானம் மற்றும் ஜீ ஸ்டுடியோஸ் சவுத் இணைந்து தயாரிக்கும் 'ரத்னம்' திரைப்படத்திற்காக மீண்டும் இணைந்துள்ளனர். இன்வீனியோ ஆரிஜனின் அலங்கார் பாண்டியன் மற்றும் கல்யாண் சுப்பிரமணியம் இப்படத்தின் இணைத் தயாரிப்பாளர்கள் ஆவர். ஏப்ரல் 26 அன்று 'ரத்னம்' திரையரங்குகளில் வெளியாக உள்ள நிலையில், சென்னை விஐடி பல்கலைக்கழகத்தில் சனிக்கிழமை மாலை 12,000 +மாணவர்கள் கலந்துகொண்ட வைப்ரன்ஸ்'24 நிகழ்ச்சியில் இத்திரைப்படத்தின் முதல் பாடலான ஞி ஷீ ஸீ ' மீ ஷ் ஷீ கூீ கூீ ஹ் ஞி ஷீ ஸீ ' மீ ஷ் ஷீ கூீ கூீ ஹ் பீணீ விணீநீலீவீ ('டோன்ட் ஒரி டோன்ட் ஒரிடா மச்சி') வெளியிடப்பட்டது. மாணவர்களை இப்பாடலுக்கு உற்சாக வரவேற்பு வழங்கினர். நிகழ்ச்சியில் விஷால் பேசியதாவது...

"வருங்கால இந்தியாவுக்கு வணக்கம். இந்த நிகழ்ச்சியின் மேடைக்கு உங்கள் மத்தியில் இருந்து நான் வர காரணம் உங்களில் ஒருவன் நான் என்பதால் தான். கல்லூரியில் படிக்கும்போது கலாச்சார பிரிவின் செயலாளராக இருந்து கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தவன் என்ற முறையில் இந்த பணி எவ்வளவு கடினமானது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்.

நீங்கள் தான் என்னை இந்த இடத்திற்கு கொண்டு வந்துள்ளீர்கள். அதற்காக உங்களுக்கு நன்றி. என்றும் உங்களில் ஒருவனாக நான் இருப்பேன் என்று உறுதி கூறுகிறேன்." தயாரிப்பாளர் கார்த்திகேயன் சந்தானம் பேசுகையில்...

"மாணவர்களாகிய உங்கள் மத்தியில் இருக்கும் போது நானும் என்னை ஒரு மாணவனாக உணர்கிறேன். 18 வருடங்களுக்குப் பிறகு கல்லூரிக்குள் நுழைந்துள்ளேன். உங்கள் அனைவரையும் இங்கு சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி." கவிஞர் விவேகா பேசுகையில்...

"பாட ஆசிரியர்களை சந்திக்கும் மாணவர்களுக்கு முன்னால் பாடல் ஆசிரியராக வந்து நிற்பதில் மிக்க மகிழ்ச்சி. 'ரத்னம்' திரைப்படம் ஒரு மிகச்சிறந்த அனுபவம். இயக்குநர் ஹரி அவர்களுடன் அவரது முதல் படத்திலிருந்து பணியாற்றி வருகிறேன். 'ரத்னம்' படத்தின் அனைத்து பாடல்களும் மிகவும் சிறப்பாக உருவாகியுள்ளன. அற்புதமான பாடல்களை தொடர்ந்து வழங்கி பான்-இந்திய இசையமைப்பாளராக இன்றைக்கு திகழ்ந்து கொண்டிருப்பவர் தேவி□□ரீ பிரசாத் அவர்கள். இந்தியா மட்டுமின்றி வங்கதேசம் போன்ற நாடுகளிலும் அவரது புகழ் பரவி உள்ளது. இன்று வெளியிடப்பட்டுள்ள பாடலும் பட்டி தொட்டி எங்கும் பட்டையை கிளப்பும். இது ஒரு ஊக்கமளிக்கும் பாடல், அனைவருக்கும் மிகவும் பிடிக்கும் என்று நம்புகிறேன். 'மார்க் ஆண்டனி' திரைப்படத்திற்கு பிறகு விஷால் உச்சத்தில் இருக்கிறார். அவருக்கும் 'ரத்னம்' படத்தின் தயாரிப்பாளர் கார்த்திகேயன் சந்தானம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இந்த திரைப்படமும் அதன் பாடல்களும் உங்கள் மனங்களில் முக்கிய இடம் பிடிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

நடிகர் சமுத்திரக்கனி பேசியதாவது...

"மாணவர்களாகிய உங்கள் அனைவரையும் சந்திப்பது மிகுந்த மகிழ்ச்சியும் உற்சாகத்தையும் தருகிறது. நன்றாக படித்து, உழைத்து முன்னேறுங்கள். ஏணியை கூரையில் போடாமல் வானத்தில் போடுங்கள். இயக்குநர் ஹரி அவர்களுக்கு நன்றி. தம்பி விஷால் கடினமான உழைப்பாளி, அவரது உழைப்புக்கு இன்னும் பல தளங்கள் காத்திருக்கின்றன. இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத், பாடல் ஆசிரியர் விவேகா, மற்றும் தயாரிப்பாளர் கார்த்திகேயன் சந்தானம் உள்ளிட்ட அனைவருக்கும் வாழ்த்துகள். ஏப்ரல் 26 அன்று திரையரங்குகளில் சந்திப்போம்."

இயக்குநர் ஹரி பேசியதாவது...

"இது எனது 17வது படம், விஷாலுடன் மூன்றாவது படம், தேவி ஸ்ரீ பிரசாத்துடன் ஆறாவது படம். 'சிங்கம்' உள்ளிட்ட எனது முந்தைய படங்களுக்கு எவ்வாறு அருமையாக பாடல்களை வழங்கினாரோ அதைவிட சிறந்த பாடல்களை 'ரத்னம்' படத்திற்கு வழங்கியுள்ளார். ஆறு பாடல்களும் மிகவும் அருமையாக வந்துள்ளன. விஷாலுடன் இணைந்து ஒரு முழு நீள ஆக்ஷன் திரைப்படத்தை வழங்க வேண்டும் என்று எண்ணினேன். 'தாமிரபரணி', 'பூஜை' உள்ளிட்ட படங்கள் ஆக்ஷன் நிறைந்தவை என்றாலும் அவற்றில் குடும்ப செண்டிமெண்ட் போன்ற இதர விஷயங்களும் இருந்தன. 'சிங்கம்', 'சாமி' போன்ற ஆக்ஷன் ததும்பும் திரைப்படமாக 'ரத்னம்' இருக்கும். இப்படத்திற்காக விஷால் கடுமையாக உழைத்துள்ளார். அவரது நடிப்பு பேசப்படும். அனைவருக்கும் நன்றி."

இசையமைப்பாளர் தேவிஸ்ரீ பிரசாத் பேசியதாவது...

"விஐடி மாணவர்களை சந்திப்பது மிகவும் மகிழ்ச்சி. இன்று வெளியிடப்பட உள்ள பாடலின் தலைப்பே 'டோன்ட் வரி டோன்ட் ஒரிடா மச்சி' ஆகும். கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில் கொரோனா போன்ற பல்வேறு சவால்களை சந்தித்து விட்டோம். எது வந்தாலும் நேர்மறையாக இருக்க சொல்லும் பாடல் தான் இது. ஏனென்றால் ஒரு விஷயத்தை அது குறித்து மிகவும் கவலைப்படாமல் நாம் எதிர் கொண்டாலே நமக்கு வெற்றி கிட்டும், அதை இந்த பாடல் அழகாக சொல்கிறது, உங்கள் அனைவருக்கும் மிகவும் பிடிக்கும். இப்பாடலுக்காக கடினமான நடன அசைவுகளை விஷால் செய்துள்ளார், பாடலை பார்த்து ரசிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன், நன்றி."

விழாவில் ஏழை குடும்பங்களை சேர்ந்த இரண்டு பள்ளி மாணவிகளின் கல்வி செலவை விஷாலின் தேவி பவுண்டேஷன் தொண்டு நிறுவனம் சார்பாக விஐடி ஏற்றது. இதற்காக விஐடி நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்கும் விஷால் நன்றி தெரிவித்தார். பல்வேறு சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள விஷாலுக்கு விஐடி துணைத் தலைவர் சேகர் விஸ்வநாதன் பாராட்டு தெரிவித்தார்.

## மக்களை திசை திருப்ப தி.மு.க. நாடகம் போதைப்பொருள் தடுப்பு: கவர்னரிடம் எடப்பாடி மனு



சென்னை, 10 மார்ச் 2024: தமிழகத்தில் போதைப்பொருட்கள் நடமாட்டம் அதிகரித்து இருப்பதாகவும், இதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கவர்னரிடம் இன்று அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மனு அளித்தார்.

கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் கவர்னர் ஆர்.என்.ரவியை எடப்பாடி பழனிசாமி இன்று காலை 11 மணியளவில் நேரில் சந்தித்து இந்த மனுவை அளித்தார்.

இந்த சந்திப்பின் போது முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, எஸ்.பி.வேலுமணி, பி.தங்கமணி, திண்டுக்கல் சீனிவாசன், டி.ஜெயக்குமார், சி.வி.சண்முகம் எம்.பி. ஆகியோர் உடன் இருந்தனர்.

எடப்பாடி பழனிசாமி, கவர்னர் ஆர்.என்.ரவிக்கு பொன்னாடை அணிவித்து பூங்கொத்து கொடுத்தார். பின்னர் போதைப்பொருட்கள் நடமாட்டம் குறித்த பட்டியல் அடங்கிய புகார் மனுவை அளித்தார்.

கவர்னர் ஆர்.என்.ரவியிடம் சி.வி.சண்முகம் போதைப்பொருட்களின் நடமாட்டம் பற்றியும், டெல்லியில் கைதான ஜாபர் சாதிக் பற்றியும் விளக்கி கூறினார்.

கவர்னரை சந்தித்து விட்டு வெளியில் வந்த எடப்பாடி பழனிசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

தமிழகத்தில் போதைப்பொருள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. தி.மு.க. அயலக அணி நிர்வாகியான ஜாபர் சாதிக் டெல்லி போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பல தகவல்களை வெளியிட்டு உள்ளார்.

3 ஆண்டுகளில் அவர் 45 முறை போதைப்பொருட்களை கடத்தி இருப்பதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன. ஜாபர் சாதிக் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு சம்பாதித்த பணத்தை சினிமா தயாரிப்புக்கு பயன்படுத்தி இருப்பதாகவும் தி.மு.க. நிர்வாகிகளுக்கு வழங்கி இருப்பதாகவும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

முதலமைச்சர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இயக்கிய சினிமா படத்தை ஜாபர் சாதிக் தயாரித்து உள்ளார். முதலமைச்சர், உதயநிதியை சந்தித்து நிதி அளித்திருப்பதும் தெரிய வந்துள்ளது. எனவே இதில் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். அது தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கோரி கவர்னரை சந்தித்து மனு அளித்துள்ளோம்.

இப்படி போதைப்பொருள் மூலமாக சம்பாதித்த பணத்தை வருகிற பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வினர் பயன்படுத்த முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது. எனவே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பதவி விலக வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

போதைப்பொருள் கடத்தலில் இருந்து மக்களை திசை திருப்ப தி.மு.க.வினர் நாடகத்தை அரங்கேற்றி வருகிறார்கள். இந்த விவகாரத்தில் உரிய முறையில் விசாரணை நடத்தப்பட வேண்டும். இல்லையென்றால் இளைஞர்கள், மாணவர்கள் சீரழிந்து விடுவார்கள். இந்த நிலை நீடித்தால் தமிழகம் போதைப்பொருள் நிறைந்த மாநிலமாக இருக்கும்.

10 நாட்களில் தமிழகத்தில் அதிக அளவில் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. போதைப்பொருள் கடத்தலில் தி.மு.க. நிர்வாகிக்கு தொடர்பு இருப்பதால் அது பற்றி அதிகாரிகள் வெளியில் தெரிவித்துள்ளனர். தங்கள் மீது குற்றமில்லை. மடியில் கனமில்லை என்றால் ஏன் பயப்படுகிறார்கள். போதைப்பொருட்கள் கடத்தல் விவகாரத்தால் தி.மு.க.வினர் நடுங்கிப் போய் உள்ளனர். பதற்றத்தில் இருக்கிறார்கள். தவறு செய்யவில்லை. நாங்கள் நிரபராதி என்றால் சட்டப்படி சந்திக்க வேண்டியது தானே. இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

## 'மகாகவிதை'க்கு ரூ 18 லட்சம் விருது: கவிஞர் வைரமுத்து மலேசியாவில் பெருந்தமிழ் விருது பெற்றார்




சென்னை, 10 மார்ச் 2024: கவிப்பேரரசு வைரமுத்து சமீபத்தில் எழுதிய 'மகாகவிதை' நூல் தமிழகம் மற்றும் இந்தியாவின் இதர பகுதிகளில் பெரும் பாராட்டு பெற்றதை தொடர்ந்து கடல் தாண்டியும் கவனத்தை ஈர்த்து வருகிறது.

மலேசிய தமிழ் இலக்கிய காப்பகமும் தமிழ் பேராயமும் இணைந்து கவிப்பேரரசு வைரமுத்துவின் சாதனை படைப்பான 'மகாகவிதை' நூலுக்கு 'பெருந்தமிழ் விருது' மற்றும் 1 லட்சம் வெள்ளி (இந்திய மதிப்பில் ரூ 18 லட்சம்) மலேசியாவில் இன்று நடைபெற்ற பிரம்மாண்ட விழாவில் வழங்கின.

தான்ஸ்ரீ டாக்டர் எஸ் .ஏ. விக்னேஸ்வரன் தலைமையில் டத்தோ ஸ்ரீ எம். சரவணன் முன்னிலையில் கோலாலம்பூரில் இன்று மாலை நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருது மற்றும் பரிசுத் தொகை கவிப்பேரரசு வைரமுத்துவிற்கு வழங்கப்பட்டது. பஞ்சபூதங்களை பற்றி விரிவாக பேசும் 'மகாகவிதை' நூலை படித்து மகிழ்ந்த மலேசிய பல்கலைக்கழக தமிழ் அறிஞர்கள் ஐந்து பேர் நூல் குறித்து சிறப்புரை வழங்கினார்கள்.

நீர் குறித்து இஸ்லாமிய கல்விக் குழுத் தலைவர் டத்தோ ஸ்ரீ இஃபாலும், காற்று குறித்து மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறை பேராசிரியர் முனைவர் இராஜேந்திரனும், தீ குறித்து சுலுத்தான் இதுரீசு கல்வியல் பல்கலைக்கழகம் தலைவர், மலேசியத் தமிழ்ப் புலவர் சங்கத்தை சேர்ந்த முனைவர் மனோன்மணதேவி அண்ணாமலையும், பூமி பற்றி மேனாள் காவல்துறை ஆணையர்

புலவனின் புவி காக்கும் வேட்கை மதிப்புமிகு டத்தோ ஸ்ரீ தெய்வீகன் ஆறுமுகமும், ஆகாயம் குறித்து மலேசியத் தமிழ்நெறிக் கழகம் தேசியத் தலைவர் தமிழ்ப்பெருந்தகை இரா திருமாவளவனும் விரிவாக பேசி கவிப்பேரரசு வைரமுத்துவின் படைப்பை வெகுவாக பாராட்டினர்.

இவ்விழாவில் தமிழ் அறிஞர்கள், படைப்பாளிகள், அரசியல் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

விருதினைப் பெற்றுக் கொண்டு ஏற்புரை ஆற்றிய கவிப்பேரரசு வைரமுத்து, மலேசிய தமிழ் இலக்கிய காப்பகம் மற்றும் தமிழ் பேராயத்திற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும் பங்கேற்ற அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்காக சமீபத்தில் மலேசியா வந்தடைந்த கவிப்பேரரசு வைரமுத்துவிற்கு 'டத்தோ' ஸ்ரீ எம் சரவணன் தலைமையில் விமான நிலையம் முதல் தங்கி இருக்கும் ஹோட்டல் வரை சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# கல்ஃப் சின்ட்ராக் மற்றும் இந்தியா பைக் வீக் 2023 இணைந்து 'சாய்-பக்கோடா ரைட்ஸ்' மாயாஜாலத்தை சென்னைக்கு கொண்டு வருகின்றன

சென்னை, 10 மார்ச் 2024: மசகு எண்ணெய் உலகில் முன்னோடியான கல்ஃப் ஆயில் லூப்ரிகண்ட்ஸ் இந்தியா லிமிடெட், சென்னையில் "சாய்-பக்கோடா" சவாரியை பெருமையுடன் வழங்கியது. ஆசியாவின் முதன்மையான மோட்டார் சைக்கிள் திருவிழாவான இந்தியா பைக் வீக் இன் சுற்றுச்சூழல் அமைப்பினுள் இந்த சவாரி ஒரு நேசத்துக்குரிய பாரம்பரியமாக இருக்கிறது. மோட்டார் சைக்கிள் சவாரி சாகசம், நட்புறவு மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் இந்த ஆண்டின் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கொண்டாட்டத்தின் தொடக்கத்தைக் குறிக்கின்ற வகையில் ஐ பி டபிள்யூ, சாய் பக்கோடா சவாரிகளின் ஒரு சிலிர்ப்பூட்டும் தொடக்கத்துடன் தனது 10வது பதிப்பை டெல்லியில் செப்டம்பர் மாதம் தொடங்கியது. இந்த ஆண்டு கல்ஃப் இன் கூட்டாண்மையுடன் இந்த இந்த நிகழ்வு ரைடர்ஸ் மற்றும் ஆர்வலர்களுக்கு ஒரு சிலிர்ப்பான அனுபவமாக இருக்கும் என்று உறுதியளிக்கிறது.

இந்த சென்னை சாய் - பக்கோடா காலை உணவு சவாரி, மண்டலம் முழுவதிலும் இருந்து 175 க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள மோட்டார் சைக்கிள் ரைடர்களை உள்வாங்கி ஒரு ஈர்க்கக்கூடிய வருகையைக் கண்டது. கர்ஜிக்கும் ஹார்லிகள் முதல் வேகமான கே டி எம்கள் மற்றும் யமா வரை பலதரப்பட்ட பின்னணிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை ஓட்டுபவர்கள் பைக்கர்ஸ் டென் இல் குவிந்துள்ளனர். சென்னை ராயப்பேட்டையில் உள்ள ஈ ஏ மால் க்கு எதிரே இருந்து மகாபலிபுரத்தில் உள்ள பே ட்ரெஷர் ரிசார்ட்ஸுக்கு 52 கிலோமீட்டர் தூரத்தின் ஒரு உற்சாகமான பயணத்தைத் தொடங்கினார்கள். அனைத்து பதிவு செய்யப்பட்ட பைக்கர்களுக்கும் திறந்த சாலையில் செல்வதற்கு முன் ஒரு கட்டாய 'பாதுகாப்பு சவாரி' அமர்வுடன் தொடங்கி நிகழ்வு முழுவதும் பாதுகாப்பு மிக முக்கியமானதாக இருந்தது.

இந்த சவாரியில் ஐ பி டபிள்யூ மார்ஷல்களும் இடம்பெற்றிருந்தனர், அவர்கள் தனித்தனியாக ரைடர்ஸ் குழுவை வழிநடத்தி, அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் ஒருங்கிணைந்த மற்றும் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்தனர். அனைத்து ரைடர்களுக்கும் ஹெல்மெட் மற்றும் ஷூக்கள் கட்டாயமாக்கப்பட்டன, அதே நேரத்தில் பார்வைத்திறனை அதிகரிக்க கல்ஃப், ஃப்ளோரசன்ட் பாதுகாப்பு ஜாக்கெட்டுகளை வழங்கியது. கூடுதலாக, தேவைப்பட்டால் உடனடி மருத்துவ உதவியை உறுதி செய்கின்ற வகையில் சவாரியின் போது ஒரு ஆம்புலன்ஸ் ஆயத்தமாக இருந்தது. இறுதி கட்டத்தில், பங்கேற்பாளர்கள் ஒரு புஷ்-அப் மற்றும் பர்பி சேலஞ்ஞ் உள்ளிட்ட சிலிர்ப்பான செயல்களில் ஈடுபட்டு, இந்த மறக்கமுடியாத சவாரிக்கு கூடுதல் உற்சாகத்தின் ஒரு அடுக்கைச் சேர்த்தனர்.

கல்ஃப் ஆயில் லூப்ரிகண்ட்ஸ் இந்தியா லிமிடெட் இன் சந்தைப்படுத்தல் தலைவர் திரு. அமித் கெஜி, கல்ஃப் இன் புகழ்பெற்ற சாய்-பக்கோடா சவாரிகளில் தனது பெருமிதத்தை வெளிப்படுத்தி கூறும்பொழுது, "இந்தியா பைக் வீக் இன் 10வது பதிப்பின் ஒரு பகுதியாக இருப்பதிலும் மற்றும் சென்னையில் உற்சாகமூட்டும் சாய்-பக்கோடா சவாரியை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த சவாரிகள் மோட்டார் சைக்கிள் சமூகத்தின் உணர்வை உருவகப்படுத்துகின்றன, நட்புறவு மற்றும் ஒரு திறந்த சாலையின் மீதான நேசத்தை வளர்க்கின்றன. நாடு முழுவதும் உள்ள மோட்டார் சைக்கிள் ஆர்வலர்களுக்கு சவாரி அனுபவத்தை விரிவுபடுத்த கல்ஃப் உறுதிபூண்டுள்ளது, மேலும் இந்த கூட்டாண்மை அந்த உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாக இருக்கிறது. அவர்கள் பைக்கிங் மீதான ஆர்வத்தைக் கொண்டாடுகின்ற அதே வேளையில் அவர்கள் பாதுகாப்பான மற்றும் மகிழ்ச்சியான பயணத்தை உறுதிசெய்கின்ற வகையில் ரைடர்களுக்கு ஊக்கமளித்து ஆதரவளிப்பதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்."என்றார் இந்தியா பைக் வீக் இன் இந்த 10வது பதிப்பு, இந்தியாவில் மோட்டார் சைக்கிள் கலாச்சாரத்தின் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. இந்தியா பைக் வீக் இன் ஒரு பிரியமான அம்சமான இந்த சாய்-பக்கோடா ரைட்ஸ், சுவையான பக்கோடாக்கள் மற்றும் பாரம்பரிய இந்திய தேநீரை ருசிக்கும் அதே வேளையில் இந்தியாவின் எழில் கொஞ்சும் இயற்கைக்காட்சிகளை ஆராய்வதற்கு ரைடர்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

கல்ஃப், மோட்டார் சைக்கிள் சமூகத்திற்கு மோட்டார் சைக்கிள் ஆர்வலர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்றவாறு உயர்தர லூப்ரிகண்டுகளை வழங்குகின்ற ஒரு நீண்டகால அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது. இந்தியா பைக் வீக் உடனான அதன் கூட்டாண்மை மூலம் ஆர்வமுள்ள பைக்கர்கள் மற்றும் ஆர்வலர்களுடன் இணைந்து மேலும் அனைவருக்கும் மோட்டார் சைக்கிள் அனுபவத்தை விரிவுபடுத்துகின்ற ஒரு சிலிர்ப்பான பயணத்தை கல்ஃப், ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

# கல்வி மேம்பாட்டுக்கு ஆலோசனை சொன்ன ஆசிரியையை பணி நீக்கம் செய்வதா? எடப்பாடி கடும் கண்டனம்

சென்னை, 10 மார்ச் 2024: கல்வி மேம்பாட்டுக்காக ஆலோசனை சொன்ன ஆசிரியை யை பணி நீக்கம் செய்வதா? என எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் பெற்றோருக்குப் பிறகு ஆசிரியப் பெருமக்களை குருவாக நிறுத்தி, பிறகுதான் தெய்வத்தை நமது முன்னோர்கள் வரிசைப்படுத்தினார்கள்.

அண்ணா தி.மு.க. ஆட்சியில், எதிர்கால சந்ததியினரை நல்லவர்களாக, வல்லவர்களாக உருவாக்கும் ஆசிரியர்களுக்கும், கல்வி வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் வழங்கி பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. ஆனால், திமுக அரசு ஆட்சிக்கு வந்தது முதலே ஆசிரியப் பெருமக்களுக்கு அறிவித்த எந்தத் தேர்தல் வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை.

இந்நிலையில், ஆசிரியை உமாமகேஸ்வரி என்பவர் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு கட்டுரைகளை சமூக வலைதளங்களில் வெளியிட்டு வந்துள்ளார். அவற்றில் ஊடகம் சார்ந்த ஒரு வலைதளத்தில் கல்வித் துறையில் பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதாகவும்; 1200-க்கும் மேற்பட்ட பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாக இருப்பதாகவும்; இந்த ஆண்டு பட்ஜெட்டில் கூட 3,200 கோடி ரூபாய் அடிப்படை கட்டமைப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உள்ளதாகவும், ஆனால், ஆசிரியர் பணி நியமனம் குறித்த அறிவிப்பு இருந்தால் நன்றாக இருக்கும் என்றும், இல்லம் தோறும் கல்வி திட்டத்திற்கு பலநூறு கோடி ரூபாய் வீணாக செலவழிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்பினால் கல்வி மேம்பாடு சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்திருந்த நிலையில், அவரை திமுக அரசு தற்காலிக பணி நீக்கம் செய்துள்ளதாக செய்திகள் தெரிய வருகின்றன.

என்ற குறளுக்கேற்ப, பணியில் இருந்த ஆசிரியை உமாமகேஸ்வரி, தமிழகக் கல்விப் பணி சிறக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் தனது கருத்தைக் கூறினால், அதனை ஆய்ந்து அதன்படி சீர்செய்வதை விட்டுவிட்டு, அந்த ஆசிரியரை இடைநீக்கம் செய்ததை வன்மையாகக் கண்டிக்கிறேன். ஆசிரியை உமாமகேஸ்வரிக்கு உடனடியாக மீண்டும் பணி வழங்க வேண்டும் என்று திமுக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# பேநியர்பை இன் மகளிர் நிதிக் குறியீட்டின்படி 45% பெண்கள் அரசாங்க ஆதரவு திட்டங்களிலிருந்து பலன்களைப் பெறுவதாக தெரிவிக்கின்றனர்

சென்னை, 10 மார்ச் 2024: 50 லட்சத்திற்கும் அதிகமான சில்லறை விற்பனை மையங்களைக் கொண்ட இந்தியாவின் முன்னணி கிளையில்லாத வங்கி மற்றும் டிஜிட்டல் நெட்வொர்க்கான பேநியர்பை, 45% பெண்கள் அரசாங்க ஆதரவு திட்டங்களின் பலன்களைப் பெறுவதாக தெரிவித்துள்ளது.

பாரதத்தில் 63% க்கும் அதிகமான பெண்கள் சுய தொழிலைத் தொடங்க விரும்புகிறார்கள், இது நிதி சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கைக்கான வலுவான விருப்பத்தை பிரதிபலிக்கிறது. "பேநியர்பை வுமன் பைனான்சியல் இண்டெக்ஸ்(பி டபிள்யூ எஃப் ஐ)" என்ற தலைப்பில் முழு இந்தியா கணக்கெடுப்பு அறிக்கையின் ஒரு பகுதியாக இந்த ஆய்வறிக்கை பகிரப்பட்டது, இது சில்லறை விற்பனைக் கடைகளில் பெண்களின் நிதி நுகர்வைக் காட்டுகிறது. இந்த கணக்கெடுப்பு நாடு முழுவதும் 5,000 க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை இடங்களை ஆய்வு செய்து, அந்த இடங்களில் காணப்பட்ட பெண் வாடிக்கையாளர்களின் நிதிப் பரிவர்த்தனைகளைப் பதிவு செய்தது. பயோமெட்ரிக் அங்கீகாரத்திற்கான அம்சத்தை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது, 95% க்கும் அதிகமான பெண் வாடிக்கையாளர்கள் பணம் எடுப்பதற்கு ஏ இ பி எஸ் ஐ தேர்வு செய்கிறார்கள். ரொக்கப் பரிவர்த்தனை ஆனது விருப்பமான முறையாக இருந்தாலும், 48% பெண்கள் அதை விரும்புகின்றனர், ஆதார்-சார்ந்த பரிவர்த்தனைகள் மற்றும் யுபிஐ கியூஆர் குறியீடுகள் இரட்டை இலக்கங்களில் வேகத்தைப் பெறுகின்றன. இந்த பிரிவில் கார்டுகள் தொடர்ந்து குறைந்த அளவே உள்ளன. குறிப்பிடத்தக்க வகையில், 18-30 வயதுடைய பெண்கள், அதைத் தொடர்ந்து 31-40 வயதுடையவர்கள் டிஜிட்டல் முறையில் மிகவும் திறமையானவர்கள், அவர்கள் நிதி பரிவர்த்தனைகளில் வலுவான விருப்பத்தைக் காட்டுகின்றனர். சுவாரஸ்யமாக, 41% பெண்கள் தங்கள் மொபைல் போன்களில் எந்த கட்டண பயன்பாட்டையும் பயன்படுத்துவதில்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

பணம் எடுத்தல், மொபைல் ரீசார்ஜ்கள் மற்றும் பில் செலுத்துதல் ஆகியவை பேநியர்பை சில்லறை விற்பனை நிலையங்களில் பெண்கள் பெறும் முதல் மூன்று சேவைகளாக விளங்குகின்றன. அதோடு, மிகவும் பொதுவான பயணம் எடுத்தல் வரம்பு ரூ.1000-2500 வரை இருக்கிறது, அதே சமயம் இ எம் ஐ பேமெண்ட்கள் பொதுவாக ரூ.500-1000 வரை இடம்பெறுகிறது. 70% பெண்கள் ஜன்-தன் சேமிப்புக் கணக்குகளை முதன்மையாக பணம் எடுப்பதற்குப் பயன்படுத்துவதாக அறிக்கை வெளிப்படுத்துகிறது. 25% க்கும் அதிகமான பெண்கள் தங்கள் கணவர்களே, தங்களின் வங்கிக் கணக்குகளை நிர்வகிப்பதாக ஒப்புக்கொண்டனர்.

முதல் மூன்று சேமிப்பு இலக்குகளில், 'குழந்தை கல்வி' முதலிடத்திலும், 'மருத்துவ அவசரநிலை' மற்றும் 'வீட்டுக்கு எலக்ட்ரானிக் பொருட்களை வாங்குதல்' அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. 54% பெண்கள் மாதாந்திர சேமிப்பிற்கான விருப்பமான வரம்பாக ரூ.750-1000 எனக் குறிப்பிட்டுள்ளனர், இது நிதித் திட்டமிடலுக்கான அவர்களின் அணுகுமுறையை முக்கியபடுத்திக் காட்டுகிறது. குறிப்பிடத்தக்க வகையில், பதிலளித்தவர்களில் 27% பேர் மட்டுமே நீண்ட காலத்திற்கு நிதித் தொகுப்பை பெற ரூ.1500க்கு மேல் சேமிக்க விரும்பினர். 71% பெண்கள் குறுகிய கால முதலீடுகளில் அதிக விருப்பத்தை வெளிப்படுத்தினர், சேமிப்பு காலம் 3-5 ஆண்டுகள் ஆகும் என திட்டமிட்டுள்ளனர். அறிக்கையானது, குறிப்பாக தொடர்ச்சியான மற்றும் நிலையான இலக்கு-அடிப்படையிலான வைப்புத்தொகைகளில், முதலீட்டு பல்வகைப்படுத்துதலுக்கான ஒரு சிறிய ஆனால் குறிப்பிடத்தக்க போக்கை அவதானித்துள்ளது. இது, நிதி மேலாண்மை மற்றும் செல்வம் சேமிப்பு ஆகியவற்றில் அதிகரித்து வரும் ஆர்வத்தை பிரதிபலிக்கும் வகையில், மாற்று முதலீட்டு வழிகள் குறித்து பெண்களிடையே அதிகரித்து வரும் விழிப்புணர்வை எடுத்துக்காட்டுகிறது. சுவாரஸ்யமாக, முதலீட்டு முடிவுகளை எடுக்கும்போது 74% பெண்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களை நம்பியிருக்கிறார்கள், அதேசமயம் 11% பேர் நிதி ஆலோசகர்களிடமிருந்து வழிகாட்டுதலை நாடுகிறார்கள். நிதி ஆலோசகர்கள் பொதுவாக தங்கள் உறவில் செல்வாக்கு செலுத்துகிறவர்கள் பெண்களாக இருக்கிறார்கள். 16% பெண்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் இருப்பதாகவும், 55% பேர் நிதி நலன் தொடர்பான பல்வேறு அரசு திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் குறித்து மிதமாக அறிந்திருப்பதாகவும் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. சுவாரஸ்யமாக, 45% பெண்கள் அரசாங்கத்தின் ஆதரவுடன் கூடிய முயற்சிகளின் பலன்களைப் பெறுவதாக தெரிவிக்கின்றனர். பெண்களிடையே (29%) காப்பீட்டுத் தயாரிப்புகள் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து வந்தாலும், நுகர்வு 2% எனும் அளவுடன் மிகக் குறைவாகவே உள்ளது. 45% பெண்கள் அரசு ஆதரவு திட்டங்களால் பயனடைவதாக தெரிவிக்கின்றனர். 68% பெண்கள் முறையான கடன் வாங்க விருப்பம் உள்ளதாக கணக்கெடுப்பு சுட்டிக்காட்டுகிறது, இது மலிவு கடன் தீர்வுகளின் அவசியத்தை வலியுறுத்துகிறது. மருத்துவக் கட்டணங்கள், வீட்டுப் பழுதுபார்ப்பு, குழந்தைகளின் கல்வி போன்ற அவசரச் செலவுகள் அல்லது விதைகள், உரங்கள் அல்லது உபகரணங்களை வாங்குதல் போன்ற விவசாயத் தேவைகளுக்காகக் கடன் பெறுவதற்கான காரணங்களாக பெண்கள் குறிப்பிடுகின்றனர்.

பெண்களிடையே ஆன்லைன் வர்த்தகம் (24%) மற்றும் ஆன்லைன் பொழுதுபோக்கு (18%) அதிகரித்து வருவதையும் பி டபிள்யூ எஃப் ஐ அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. ஆன்லைன் வர்த்தகத்தில் தினசரி மளிகைப் பொருட்கள் மற்றும் வீட்டுப் பொருட்கள் (27%) வாங்குவது அதிகமாக இருக்கிறது. அதுவும், சில்லறை விற்பனைக் கடைகளுக்கு நடுவே ஆன்லைன் வர்த்தகம் நல்ல வளர்ச்சியைப் பெற்றுவருகிறது. இதைத் தொடர்ந்து ஆடைகள் மற்றும் அணிகலன்கள் மற்றும் வீடு மற்றும் சமையலறை பொருட்கள் முறையே 24% மற்றும் 23% எனும் வளர்ச்சியைப் பெற்றுவருகிறது. இதன்மூலம் பெண்கள் ஆன்லைன் வர்த்தகத்தில் ஆர்வமுள்ளவர்கள் எனும் உண்மை புலனாகிறது. அதோடு, இத்தகைய சேவைக்கான தேவை இருப்பதும் தெரியவருகிறது. பயண முன்பதிவுகள் மற்றும் பான் கார்டு வழங்குதல் ஆகியவை குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளன, பதிலளித்தவர்களில் 96% பேர் தங்கள் அருகிலுள்ள கடையில் இருந்து ரயில் டிக்கெட்டை முன்பதிவு செய்ய விருப்பம் தெரிவித்தனர். இது பெண்களின் தன்னம்பிக்கை மற்றும் நிதி சார்ந்த சுதந்திரமான விருப்பத்தை வெளிப்படுத்துகிறது.

ஆய்வு குறித்து கருத்து தெரிவித்த பேநியர்பை நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி ஆனந்த் குமார் பஜாஜ், "இந்தியாவில் பெண்கள் தொழில் முனைவோர் உணர்வை முன்னெப்போதையும் விட 63% க்கும் அதிகமானோர் பெற்றிருப்பதும், வருமானத்தைப் பெருக்குவதற்கான வழிகளைத் தேடுவதைப் பார்ப்பதும் மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரு நாட்டின் வளர்ச்சியை நோக்கிய பயணத்தில், பெண்களும் சம பங்குதாரர்களாக இருக்க வேண்டும். பேநியர்பை இல், சமூக மற்றும் பொருளாதார மாற்றத்தை உண்டாக்கும் ஆற்றலைப் பயன்படுத்தி, பெண்களை நமது நாட்டின் ஜி டி பி இருப்புப் பகுதியாக அங்கீகரிக்கிறோம். ஒரு நிறுவனமாக, பெண்கள் மேம்பாட்டிலிருந்து பெண்கள் தலைமையிலான வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் மாற்றத்துடன் நாங்கள் இணைந்துள்ளோம். " என்று பெருமிதத்துடன் தெரிவித்தார். "இ-காமர்ஸ், மியூட்சுவல் ஃபண்டுகள் மற்றும் நிலையான வைப்புத்தொகை போன்ற புதிய சேவைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் கிராமப்புறங்களில் ஒரு நம்பிக்கைக்குரிய போக்கைப் பார்க்க முடிகிறது. அது பெண்கள் முறையான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடத் தயாராகி வருகின்றனர் என்பதை தெளிவுப்படுத்துகிறது. பெண்களின் சேமிப்பு, முதலீடுகள் மற்றும் பிற முக்கிய அம்சங்களில் அதிக சுதந்திரத்துடன் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்" என்று முடித்தார் பஜாஜ். பேநியர்பை நிறுவன சி எம் ஓ ஆன ஜெயத்ரி தாஸ்குப்தா பேசுகையில், "இந்தியா ஒரு ஆழமான டிஜிட்டல் மாற்றத்தின் வாசலில் நிற்கிறது. ஆயினும்கூட, அதன் திறனை முழுமையாக பயன்படுத்த, வேகமாக வளர்ந்து வரும் இந்த டிஜிட்டல் சூழலில் தடையின்றி ஒருங்கிணைக்க தேவையான கருவிகளாக நம் பெண்களும் இருக்க வேண்டும். எங்கள் பி டபிள்யூ எஃப் ஐ இன் நான்காவது பதிப்பை அறிமுகப்படுத்தியதன் மூலம், நாங்கள் எங்கள் முன்னேற்றம் பற்றிய விரிவான மதிப்பீட்டை மேற்கொள்கிறோம் மற்றும் பாரதத்தின் வளர்ச்சிப் பயணத்தில் பெண்களை சமமான பங்கேற்பாளர்களாக மாற்றுவதற்கான வரைபடத்தை உருவாக்குகிறோம்" என்று கூறினார். எங்களின் சமீபத்தில் தொடங்கப்பட்ட டிஜிட்டல் நாரி முயற்சியின் மூலம், பெண்களுக்கு கூடுதல் வருமான வாய்ப்புகளை வழங்குகிறோம், அவர்களின் நேரம், இருப்பிடம் (வீடு/கடையிலிருந்து) மற்றும் திட்ட விருப்பங்களின்படி அவர்களின் சமூகங்களுக்கு நிதி மற்றும் டிஜிட்டல் வாய்ப்புகளை வழங்க உதவுகிறோம். தொழில்நுட்ப மற்றும் நிதித் தடைகளைத் தகர்த்து மேலும் சமத்துவமான சமுதாயத்தை உருவாக்கும் பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை உருவாக்குவதே எங்கள் நோக்கம்" என்று தாஸ்குப்தா மேலும் கூறினார்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# 5வது முறையாக வெற்றி கூட்டணி தொடர்கிறது மாநிலங்களை மதிக்கும் மத்திய அரசு அமைய நாற்பதுக்கு நாற்பது வெல்ல வேண்டும் தொண்டர்களுக்கு ஸ்டாலின் கடிதம்

சென்னை, 10 மார்ச் 2024: மாநிலங்களை மதிக்கும் மத்திய அரசை அமைக்க வேண்டுமானால் நாம் இங்கு நாற்பதுக்கு நாற்பதும் வென்றாக வேண்டும். வெற்றி ஒன்றே உங்களது நோக்கமாக இருக்கட்டும்" என்று தி.மு.க. தொண்டர்களுக்கு அக்கட்சியின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பான கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது:

கடந்த பத்தாண்டுகளாக இந்தியாவை ஆண்ட பா.ஜ.க. அரசானது, நாட்டையே பல்லாண்டு காலம் பின்னோக்கிக் கொண்டு போய்விட்டது. இதனை இப்போது தடுக்காவிட்டால் இனி எப்போதும் தடுக்க முடியாது என்ற எண்ணத்தில் தான் இந்தியா முழுமைக்குமான ஜனநாயக சக்திகளின் அணிச் சேர்க்கை நடைபெற்றது.

பா.ஜ.க.வை வீழ்த்துவது என்பது மட்டுமல்ல, அதன் பிறகு அமையப் போகும் அரசானது மக்களாட்சி, சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம், மாநில உரிமைகள், விளிம்புநிலை மக்களின் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டாட்சி அரசாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் 'இந்தியா' கூட்டணி அமைக்கப்பட்டது. அகில இந்தியக் கட்சிகள், மாநிலங்களை ஆளும் கட்சிகள், மாநிலங்களை ஆண்ட கட்சிகளை உள்ளடக்கிய மாபெரும் அணியைத் தொடங்கினோம்.

தங்களை எதிர்ப்பதற்கு யாரும் இல்லை என்ற மமதையுடன் இருந்த பாஜக தலைமையானது, அதன் பிறகுதான் களத்தின் உண்மை நிலவரத்தை உணர்ந்தது. 'இந்தியா' என்ற சொல்லையே சொல்லாமல் தவிர்த்தது. 'இந்தியா' கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் கட்சிகளைத் தன்னுடைய அதிகார அமைப்புகளின் மூலமாக பாஜக ஆட்சியானது வேட்டையாடியது. இந்த கூட்டணியின் வலிமையை நாட்டுக்கு உணர்த்தியதே இதுபோன்ற பா.ஜ.க.வின் சர்வாதிகார நடவடிக்கைகள்தான்.

பத்தாண்டு காலத்துக்கு முன்னால் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல் ஆட்சி முடியப் போகும் நிலையில் மாநிலம் மாநிலமாகச் சென்று திட்டங்களைத் தொடங்கி வைத்துக் கொண்டு இருக்கிறார் பிரதமர் மோடி. அவரது அவசரகாலப் பதற்றமானது அவர் முகத்தில் இருக்கும் பயத்தைக் காட்டுகிறது. 'மீண்டும் மோடி' என்று அவரது ஆதரவாளர்கள் எவ்வளவு கூச்சல் எழுப்பினாலும், 'வேண்டாம் மோடி' என்ற முழக்கமே இந்தியா முழுமைக்கும் இன்று எதிரொலித்துக் கொண்டு இருக்கிறது.

இந்தத் தேர்தலில் அருமை நண்பர் கமலஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யமும் நம் அணியில் இணைந்துள்ளது. அவரையும் வரவேற்றுள்ளோம். இந்த அணிக்காகத் தமிழகம் முழுவதும் பரப்புரை பயணம் செய்ய இருப்பதாக கமல் அறிவித்துள்ளார். 2025 மாநிலங்களவையில் அவரது கட்சியின் குரல் ஒலிக்க இருக்கிறது.

நாங்கள் கொடுத்தோம், அவர்கள் பெற்றார்கள் என்பதாக இல்லாமல், 'அனைவரும் ஒத்த சிந்தனையுடன் அமர்ந்து பேசித் தொகுதிகளைப் பகிர்ந்து கொண்டோம்' என்பதுதான் உண்மையாகும். அனைத்துத் தலைவர்களும், ஊடகங்களில் அளித்த பேட்டிகளில் இதனை வெளிப்படையாகவே சொல்லி இருக்கிறார்கள். எண்ணிக்கை அல்ல, எண்ணம்தான் முக்கியம் என்பதை உணர்ந்தவர்கள் நம் கூட்டணிக் கட்சித் தலைவர்கள். பாஜகவை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை நோக்கம் மட்டுமே கொண்ட தலைவர்கள் இவர்கள். இந்த ஒற்றுமை உணர்வு தான் 2019-ம் ஆண்டு முதல் தமிழகத்தில் அனைத்து வெற்றிகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது.

தி.மு.க. தலைமையிலான இக்கூட்டணியின் வெற்றிக்கு கட்சித் தொண்டர்கள் அயராது பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புதுவை உள்ளிட்ட தமிழகத்தின் 40 தொகுதிகளிலும், 'வேட்பாளர் மு.க.ஸ்டாலின்' என்பதை மனதில் வைத்து அனைவரும் பணியாற்ற வேண்டும். அனைத்துத் தொகுதியிலும் நானே போட்டியிடுகிறேன் என்பதை உள்ளத்தில் தாங்கி அனைத்து உடன்பிறப்புகளும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாற்பதுக்கு நாற்பது என்ற அளவில் வென்றால்தான் நாம் நினைக்கும் அரசியல் மாற்றமானது மத்திய அரசில் நடக்கும். மாநிலங்களை மதிக்கும் மத்திய அரசை அமைக்க வேண்டுமானால் நாம் இங்கு நாற்பதுக்கு நாற்பது வென்றாக வேண்டும். வெற்றி ஒன்றே உங்களது நோக்கமாக இருக்கட்டும். இவ்வாறு ஸ்டாலின் கூறியுள்ளார்.

# சர்வேஸ்பாரோ சர்வதேச மகளிர் தினத்தில் 'எம்பவர்ஹர்' உடன் பெண்களின் ஆரோக்கியத்திற்கான அதன் நிலைப்பாட்டை எடுக்கிறது



சென்னை, 10 மார்ச் 2024: சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, முன்னணி அனுபவ மேலாண்மை தளமான சர்வேஸ்பேரோ, அதன் சி எஸ் ஆர் பிரிவான ஸ்பாரோகேரின் கீழ் "எம்பவர்ஹர்" என்ற முக்கிய முயற்சியைத் துவக்கியது. இந்த முயற்சியின் மூலம், ஸ்பாரோகேர் 12 சுகாதார விற்பனையை நிறுவியது. சென்னையிலுள்ள 8 பள்ளிகளில் இயந்திரங்கள், இளம் பெண்களுக்கு அவசியமான மாதவிடாய் பராமரிப்புக்கு அதிகாரம் அளிப்பதில் ஒரு குறிப்பிடத்தக்க படியாகும். இந்த முயற்சியானது தண்டலம், கொளத்துவாஞ்சேரியில் உள்ள ஆதி திராவிடர் அரசு உயர்நிலைப் பள்ளியில் முதல் நிறுவலுடனும், அதைத் தொடர்ந்து கெருகம்பாக்கம், கோவூரில் உள்ள பெண்கள் அரசுப் பள்ளியிலும் நிறுவப்பட்டது. அரசுப் பள்ளி, மற்றும் குன்றத்தூரில் உள்ள அரசு பெண்கள் ஹயர் செகண்ட்ரி பள்ளி போன்றவை, இளம் பெண்களுக்கு அத்தியாவசியமான மாதவிடாய்க் கவனிப்புடன் வலுவூட்டுவதற்கான ஒரு தீர்க்கமான படியைக் குறிக்கின்றன.

உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான பெண்களுக்கு சுகாதாரப் பொருட்களுக்கான குறைந்த அணுகல் உள்ளது, இது 'கால வறுமை' என்று அழைக்கப்படுகிறது. இந்த நிலை குறிப்பிடத்தக்க சுகாதார அபாயங்களுக்கு பங்களிப்பது மட்டுமல்லாமல், சமூக இழிவை அதிகரிக்கிறது, மேலும் சமூகம் மற்றும் கல்வி வாய்ப்புகளிலிருந்து பாதிக்கப்பட்டவர்களை மேலும் தனிமைப்படுத்துகிறது. சர்வேஸ்பேரோ இன் "எம்பவர்ஹர்" முன்முயற்சியானது, தேவைப்படும் மாணவர்களுக்கு இலவச, அணுகக்கூடிய மாதவிடாய் சுகாதார தயாரிப்புகளை வழங்குவதன் மூலம் இந்த இடைவெளியை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இதனால் இளம் பெண்கள் தொடர்ந்து பள்ளிக்குச் செல்லவும் அவர்களின் கல்வியில் தீவிரமாக பங்கேற்கவும் உதவுகிறது. "கால ஏழ்மையைக் கையாள்வதன் மூலம், நாங்கள் ஒரு முக்கியமான சுகாதாரப் பிரச்சினையைத் தீர்க்கவில்லை, ஆனால் இளம் பெண்களுக்கான கல்விக்கான தடைகளைத் தகர்க்கிறோம்," என்று சர்வேஸ்பாரோவின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஷிஹாப் முகமது கூறினார். அடுத்த தலைமுறைக்கு மேலும் உள்ளடக்கிய மற்றும் ஆரோக்கியமான எதிர்காலம்."

பெண்கள் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டு சங்கம் (வீட்ஸ்) உடன் இணைந்து, பெண்கள் அதிகாரமளிப்பதில் நீண்ட கால அர்ப்பணிப்பு கொண்ட ஒரு புகழ்பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனம், சர்வேஸ்பேரா, சென்னையின் கிராமப்புறங்களில் சரியான சுகாதார வசதிகள் இல்லாத பள்ளிகளை கண்டறிந்தது. இந்த ஒத்துழைப்பு, பெண்களின் ஆரோக்கியம் மற்றும் கல்வியை மேம்படுத்துவதற்கான ஒரு பகிரப்பட்ட பார்வையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, பெண் அதிகாரமளிப்பதற்கான உலகளாவிய முயற்சிகளுடன் இணைகிறது.

# சர்வதேச மகளிர் தினமான 2024 அன்று, இந்துஸ்தான் கோகோ-கோலா பானங்கள் 25,000 பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் பல மாநில முயற்சியை நிறைவு செய்கின்றன



சென்னை, 10 மார்ச் 2024: சர்வதேச மகளிர் தினம் 2024 அன்று, இந்தியாவின் முன்னணி எஃப்எம்சிஜி நிறுவனங்களில் ஒன்றான ஹிந்துஸ்தான் கோகோ-கோலா பானங்கள் (எச் சி சி பி), 25,000 பெண்களுக்கு பயிற்சி நிதி மற்றும் டிஜிட்டல் கல்வியறிவை வழங்குவதற்கான பல மாநில பெண்கள் அதிகாரமளிக்கும் முயற்சியை வெற்றிகரமாக முடித்ததாக அறிவித்துள்ளது. . இந்த மகத்தான சாதனையானது, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் அறிவிக்கப்பட்ட பெண்களின் அதிகாரமளிப்புக்கான எச் சி சி பியின் உறுதிமொழியை எதிரொலிக்கும் வகையில், நிதி உள்ளடக்கம் மற்றும் டிஜிட்டல் ஆகியவற்றில் பாலினப் பிரிவைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

இந்த முயற்சி ஒய்4டி அறக்கட்டளையுடன் இணைந்து நடத்தப்பட்டது. மகாராஷ்டிரா, குஜராத், மத்தியப் பிரதேசம், தெலுங்கானா, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கோவா, மேற்கு வங்காளம், பீகார், அசாம் மற்றும் ஒடிசா உள்ளிட்ட 12 இந்திய மாநிலங்களின் மாறுபட்ட நிலப்பரப்பு முழுவதும் பரவியிருக்கும் இந்த திட்டம் ஒரு மாறும் வகுப்பறை அடிப்படையிலான முறையைப் பின்பற்றியது. இது பல்வேறு பின்னணியில் உள்ள பெண்களின் பல்வேறு தேவைகள், ஆர்வங்கள் மற்றும் திறமை நிலைகளை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டது, நிதி மற்றும் தொழில்நுட்பத்தின் சக்தியைப் பயன்படுத்த அவர்களுக்கு உதவுகிறது.

புதிய பொருளாதாரத்தில் வளர்ச்சியடைவதற்கு முக்கியமான திறன்களின் பரந்த அளவிலான உள்ளடக்கத்தை உள்ளடக்கியதாக பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. வங்கி மற்றும் கணக்கு அமைப்புகளின் அடிப்படைகள் முதல் யூனிஃபைட் பேமெண்ட்ஸ் இன்டர்ஃபேஸ் (ஹிறிமி) வழிசெலுத்தல் வரை, ஆர்வமுள்ள முதலீட்டு உத்திகள் முதல் ஆன்லைன் வங்கியை மேம்படுத்துவது வரை, இந்த திட்டம் பெண்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட டிஜிட்டல்

பேட்டி பச்சாவோ பேட்டி பதாவோ, சுகன்யா சம் ரித்தி யோஜனா போன்ற அரசாங்க முயற்சிகளையும் கவனித்தது. நாரி சக்தி. மொபைல் பேங்கிங், டிஜிட்டல் மார்க்கெட் இணைப்பு மற்றும் சைபர் செக்யூரிட்டி ஆகியவற்றை உள்ளடக்கிய டிஜிட்டல் கல்வியறிவு கூறு சமமாக விரிவானது. இவ்வாறு பங்கேற்பாளர்கள் ஒரு வலுவான வாழ்வாதாரத்தைப் பெறுவதற்கும், குடும்பப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதற்கும் வழி வகுக்கிறது.

உள்ளூர் மொழிகளில் நடத்தப்பட்ட ஊடாடும் அமர்வுகள், சுருக்கமான சிறு புத்தகங்கள், முன் பதிவு செய்யப்பட்ட விரிவுரைகள் மற்றும் நிறைவுச் சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் ஊக்கமளிக்கும் கற்றல் அனுபவத்தை உறுதி செய்தன. இந்த தனிப்பயனாக்கப்பட்ட அணுகுமுறை பங்கேற்பாளர்கள் திறம்பட வழங்கிய அறிவைப் புரிந்துகொண்டு தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கிறது.

இந்த குறிப்பிடத்தக்க மைல்கல்லை பிரதிபலிக்கும் வகையில், ஹிந்துஸ்தான் கோகோ கோலா பானங்களின் தலைமை பொது விவகாரங்கள், தகவல் தொடர்பு மற்றும் நிலைத்தன்மை அதிகாரி திரு. ஹிமான்ஷு பிரியதர்ஷி, "சர்வதேச மகளிர் தினத்தை 2024 கொண்டாடும் போது, 25,000 பெண்களுக்கு வெற்றிகரமாக அதிகாரமளித்ததை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறோம். நாடு, இந்த முயற்சியானது, நமது சமூகங்களுக்குள் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களை உருவாக்குவதற்கான எங்கள் அர்ப்பணிப்பிற்கு ஒரு சான்றாகும். இந்தப் பெண்களின் நிதி மற்றும் டிஜிட்டல் வாழ்க்கையின் கட்டுப்பாட்டை எடுத்துக்கொள்வதன் மூலம், நாங்கள் அவர்களின் திறனை மட்டும் மதிக்கவில்லை; அவர்களின் செழுமைக்காக முதலீடு செய்கிறோம். குடும்பங்கள், நமது தேசத்தில் பெண்கள் தலைமையிலான வளர்ச்சிக் கதைக்கான நமது நெறிமுறைகள் மற்றும் அரசாங்கத்தின் பார்வையுடன் ஒத்துப்போகிறது, நேர்மறையான சமூக மாற்றத்தை இயக்குவதில் தொழில்நுட்பத்தின் முக்கிய பங்கைக் காட்டுகிறது."

ஒய் 4 டி அறக்கட்டளையின் தலைவர் திரு. பிரபுல் நிகம் நன்றி கூறினார், "ஒய் 4 டி அறக்கட்டளையில், கல்வி மற்றும் திறன் மேம்பாடு மூலம் தனிநபர்கள் மற்றும் சமூகங்களை மேம்படுத்துவதே எங்கள் நோக்கம். எச் சி சி பி உடனான பெண்கள் அதிகாரமளிக்கும் திட்டம் கூட்டுறவின் வலிமைக்கு சான்றாக உள்ளது. பெண்களின் நிதி மற்றும் அவர்களின் எதிர்காலத்தைக் கட்டுப்படுத்தவும் டிஜிட்டல் புரட்சியால் வழங்கப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் நாங்கள் தயார்படுத்தியுள்ளோம்."

கர்நாடகாவை சேர்ந்த இத்திட்டத்தின் பயனாளிகளில் ஒருவரான திருமதி நஜியா பானு கூறுகையில், "நான் திட்டத்தில் சேரும் முன், எனது மகளின் எதிர்காலத்திற்கான அரசு திட்டங்கள் எதுவும் தெரியாது. பாரம்பரிய வழியில், குறிப்பிட்ட திட்டம் ஏதுமின்றி பணத்தை சேமித்து வந்தேன். ஆனால் இந்த பயிற்சியின் மூலம், 'சுகன்யா சம்ரித்தி யோஜனா' மற்றும் அதன் பலன்கள் பற்றி தெரிந்து கொண்டேன். இப்போது, இந்த திட்டத்தின் கீழ் கணக்கு துவங்கி, என் மகளின் எதிர்காலத்திற்காக ஒவ்வொரு மாதமும் பணத்தை சேமித்து வருகிறேன். பயிற்சி அளித்த எச் சி சி பி-க்கு நான் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இது பெண்களுக்குப் பொருத்தமானது மற்றும் உதவிகரமானது. இந்த ஆதரவு எனது வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது

ஒடிசாவைச் சேர்ந்த இத்திட்டத்தின் மற்றொரு பயனாளியான திருமதி. லிசா நாயக், "எனது குடும்பத்தில் கார்ப்பரேட் வேலையைப் பெற்ற முதல் நபர் நான்தான், ஆனால் நாங்கள் வறுமையுடன் வாழ்நாள் முழுவதும் போராட்டங்களை எதிர்கொண்டோம், சேமிப்பு எதுவும் இல்லை. முதலீடுகளைப் பற்றி எனக்குத் தெரியாததால் மாதம் 3000 ரூபாய் சேமித்து வைப்பது பெரிதாக உதவவில்லை. நிதி கல்வியறிவு அமர்வுக்குப் பிறகு, ஸ்மார்ட் முதலீடுகளின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டேன். இப்போது, நான் சிறந்த, அதிக வருவாய் ஈட்டும் விருப்பங்களுக்கு மாறுவதில் உறுதியாக இருக்கிறேன், மேலும் உடல்நலக் காப்பீட்டிலும் முதலீடு செய்துள்ளேன். நீண்ட கால முதலீடுகளின் மதிப்பை மற்றவர்களுக்குப் புரிந்துகொள்ள உதவும் சமூக அமர்வுகளில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த புத்திசாலித்தனமான திட்டத்திற்கு எச் சி சி பி மற்றும் ஒய் 4 டி அறக்கட்டளைக்கு நன்றி.".

உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிக்கும் சாம்பியன் முயற்சிகளுக்கு எச் சி சி பி உறுதியுடன் உள்ளது. 25,000 பெண்களுக்கு அதிகாரமளிக்கும் குறிப்பிடத்தக்க சாதனையுடன், நிறுவனம் இளைஞர்களுக்கான விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மேம்பாடு, மாணவர்களுக்கான 'கேம்பஸ் டு கார்ப்பரேட்' திட்டங்கள் மற்றும் ஏற்கனவே 700,000 தனிநபர்கள் பயனடைந்த பரந்த சமூக முயற்சிகளையும் மேம்படுத்துகிறது.